**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.30/2023** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W. 5** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | முருகானந்தம் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **05.08.2025**

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொளத்தூர் மேற்கு கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிகிறேன். கடந்த 2015ம் வருடம் நொச்சிக்குளம் கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக இருந்தபோது சர்வே எண்.490/1 , புல எண்.490-3A ஆகிய நிலங்களுக்கான உரிமைதாரர்கள் பற்றி காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பட்டா எண்.96ல் புல எண்.490/1ல் ஹெக்டர் 0.39.0 ஏர்ஸ் கூட்டாக நொச்சிக்குளம் கிராமத்தை சேர்ந்த லட்சுமணன் மகன் அப்பாதுரை, அழகுதுரை மகன் சக்திவேல் ஆகியோர் பெயரில் உள்ளது என்றும், பட்டாஎண்.1684 புல எண்.490/3Aவில் 0.45.5 ஏர்ஸ் நிலங்கள் மேற்கண்ட அப்பாதுரை மற்றும் சக்திவேல் பெயரில் கூட்டாக உள்ளது எனவும் சான்று வழங்கினேன். அந்த சான்று அடங்கலுடன் கூடியது அ.சா.ஆ.2 ஆகும். இதுசம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாய்மொழியாக தான் ஆய்வாளர் என்னிடம் ஆவணம் கேட்டார். அ.சா.ஆ.2 ஆவணத்தை யாரிடம் கொடுத்தேன் என்றால் யாரிடம் கொடுத்தேன் என்று தெரியவில்லை. அரியலூர் காவல் நிலையத்தை சேர்ந்த போலிசாரிடம் கொடுத்தேன். ஆவணங்களை பெற்று சென்ற பின்னர் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. போலிசாரிடம் சான்று மற்றும் அடங்கலை சேர்த்து கொடுத்தேன். அடங்கலில் 04.11.2015 என்று தேதி உள்ளது என்றால் சரிதான். சான்று 30.12.2015 தேதியிட்டது என்றால் சரிதான். அடங்கலில் அது நகை பயிர் கடன் பெறுவதற்காக மட்டும் வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.2ன் படி அதில் குறிப்பிட்டுள்ள நிலம் அப்பாதுரை மற்றும் சக்திவேலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். அப்பாதுரை பெயருக்கு வங்கியில் கடன் பெறுவதற்காக அடங்கல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவருடைய பாகத்தை பொறுத்து வழங்கப்பட்டது. புல எண் உட்பிரிவு செய்யப்படவில்லை. அ.சா.ஆ.2 சான்று வழங்கும் போது போலிசார் என்னை விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.